# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.66/2023** **நாள் : 30.08.2023**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (30.08.2023) நெதர்லாந்து நாட்டின் சார்பாக சென்னையில் செயல்படுத்தப்பட உள்ள "1000 ஏரிகள் கொண்ட அபூர்வ சென்னை" திட்டத்தினை சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் இன்று (30.08.2023) நெதர்லாந்து நாட்டின் சார்பாக சென்னையில் செயல்படுத்தப்பட உள்ள "1000 ஏரிகள் கொண்ட அபூர்வ சென்னை" திட்டத்தினை சென்னை லிட்டில் பிளவர் கான்வென்டில் தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக ரூபாய் 40 ஆயிரம் கோடி வழங்கியுள்ளார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பிலும், பிற மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் மற்றும் தனி குடிநீர் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சுமார் 1000 மில்லியன் லிட்டருக்கும் மேலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சுமார் 85 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெற்று வருகிறார்கள். மேலும், பிற மாவட்டங்களில் தனிக் குடிநீர் திட்டம் நீங்கலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 544 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு 2104 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்,

12 மாநகராட்சிகள், 67 நகராட்சிகள், 344 பேரூராட்சிகள் மற்றும் 52,321 ஊரக குடியிருப்புகளில் உள்ள 4.53 கோடிக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் நாளொன்றுக்கு 5 கோடிய 36 இலடசத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சுமார் 3122 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இனி வரும் காலத்திற்குத் தேவையான குடிநீரினை வழங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இத்தேவையினை ஈடு செய்ய தமிழ்நாடு அரசு தொழில் நுட்ப ரீதியான திட்டங்களையும், அண்டை மாநில நதிநீர் பங்கீடு மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. சென்னை மாநகரம் இந்தியாவிலேயே மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டில் முன்னோடி நகரமாக தொடர்ந்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில் 1990ஆம் ஆண்டு முதன்முதலாக இரண்டாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக மணலி மற்றும் அதன் அருகில் செயல்பட்டுவரும் தொழிற்சாலைகளுக்கு தற்போது வரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் தலா 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்சவ்வூடு பரவுதல் மூலமாக இரண்டு மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நிலையங்கள் மூலம் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் மணலி, எண்ணூர், இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம், தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் உட்பட மாநகரத்தின் மொத்த நீர்த் தேவையில் தற்போது கழிவுநீர் மறு சுழற்சி மற்றும் மறு பயன்பாடு மூலம் சுமார் 10 சதவிகித

தேவையினை வழங்கி வருகிறது. மீஞ்சூர் மற்றும் நென்மேலியில் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், நெம்மேலியில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 21.08.2023 அன்று, பேரூரில், நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் அனைத்தும் முடிக்கப் பெற்ற பின்னர், கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து நாளொன்றுக்கு 750 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் நீர் வழங்கலின் சமநிலை ஏற்படுத்திட முடியும். இத்திட்டம் சுற்றுச்சூழல் மேம்பாட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளதால் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படும். பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அருகிலுள்ள திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் பிற நீர்நிலைகளை இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்துவதால் எதிர்காலங்களில் சென்னைக்குத் தேவைப்படும் குடிநீர் முழுமையாக வழங்கிட முடியும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்வரசு இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எவ்வித தொய்வுமின்றி வழங்கிடும். மேலும், இத்திட்டத்திற்குத் தேவையான அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளும் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அரசு கூடுதல் தலைமை செயலாளர் / தலைவர், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், திரு.ஹென்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., நெதர்லாந்து நாட்டின் துணை தூதர்கள், திரு.ஹெங்க ஓவிங்க் (Henk Ovink), திரு.எவூட் டி விட் (Ewout de Wit), ஜெர்மன் நாட்டின் துணை தூதர், திருமிகு.மைக்கேல் குச்லர் (Michaela Kuchler), இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமிகு. ஏவா ஃபென்னஸ் (Ev Pfannes) ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்